தமிழ் முரசு

15-10-'67 L-22

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!

15-10-47

தமிழ் முரசு

தொகுதி : ௧	ஆசிரியர் : ம. பொ. சிவஞானம்	பகுதி ௨௦

பொருளடக்கம்

ஜமீன் ஒழிப்பு	தலையங்கம்	... ௨
தமிழென்னும் போதே	தமிழன்	... ௭
மொழியும் வழியும்	ஞானம்	... ௯
உறங்காதே தோழா	கூ. ஆறுமுகம்	... ௧௫
இந்தியாவின் ஒருமையும் தேசீய இனங்களின் உரிமையும்	தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்	... ௧௭
வாய் திறக்கமாட்டேன்	மு. வரதராசன்	... ௨௫
தமிழன் குரல்		... [illegible]
புதிய அரசியலும் மாகாணங்களும்		
பைத்தியகாரன்		
செய்திகள்		
மதிப்புரை		

....

.....

வி

ஜமீன் ஒழிப்பு

ஏகாதிபத்தியம் இந்தியாவை விட்டு வெளியேறினாலும் அதன் சின்னங்கள் இன்னும் மறையவில்லை. முற்போக்குள்ள நாடுகளிலெல்லாம் நிலப்பிரபுத்துவத்தின் முதுகெலும்பு எப்போதோ முறிந்துவிட்டது. அதை வைத்த குழியில் புதிதாகத் தோன்றியுள்ள முதலாளித்துவத்தையும் வைத்து மண் மூடும் புரட்சியும் வலுத்துவருகிறது. இந்தியாவிலோ இப்பொழுதுதான் ஜமீன் ஒழிப்பு மசோதா ஆலோசனையில் இருக்கிறது.

ஜமீன்தாரித்துவம் பிரிட்டிஷாரால் ஏற்படுத்தப்பட்டதா? அதற்கு முன்னே தோன்றியதா? என்ற ...ப்ச்சிகளெல்லாம் அதிகமாக நடக்கின்றன. என் ... முறையை ஒழித்துவிடவேண்டு ...ம்பாலோர் ஒன்று ...தை ஏற்றுக் ...ம்பாலான ...!

...ரும்ப ...ளவு ...ம் ...டு

கோருகிறது: இதில் வேடிக்கை என்னவென்றால், 'நிலத்தின்மேல் ஜமீன்தாரர் உரிமை கொண்டாட நியாயமில்லை. அது கொடுமை, 'அந்தக் கொடுமையை ஒழித்தே தீருவோம்.' என்று முழக்கஞ் செய்யும் அமைச்சர் குழுவினர்கூட நஷ்டஈடு தருவதில் ஜமீன்தாரரோடு பேரம்பேசுவதுதான். நிலத்தின் மீது இத்தனை நாளும் நீதியற்ற முறையில் உரிமை கொண்டாடியவர்களுக்கா அரசாங்கம் நஷ்டயீடு கொடுப்பது? அதுவும் சேமிப்பு நிதியைக் கரைத்துக் கொண்டு காலந்தள்ளும் அரசாங்கம்-மதுவிலக்கிலே 17 கோடியை இழந்துள்ள அரசாங்கம்—ஆசிரியர்களின் வருவாயை உயர்த்த வழியற்ற அரசாங்கம் தலைமுறை தலைமுறையாகச் சுரண்டிக் கொழுத்துச் சுகபோகவாழ்வு நடாத்திய ஜமீன்தாரர்களுக்கு நஷ்டயீடு கொடுப்பதென்றால், மக்கள் பொறுத்துக் கொள்ளமுடியுமா?

மேலும், இந்த நஷ்டயீடு முறையை வேறு துறைகளில் இதுவரை கையாண்டதில்லை. கள்ளுக் கடைகளை மூடியதனால் லட்சக்கணக்கான கள்ளிறக்கும் தொழிலாளர் வேலையிழந்து வேதனைப்படுகிறார்கள். அவர்களுக்கு நஷ்டயீடு கொடுக்கவில்லை. அப்படியிருக்க ஜமீன்தாரர்களுக்கு மட்டும் நஷ்டயீடு கொடுப்பதற்குக் காரணம் என்ன?

காங்கிரஸ் தலைமையினர் சோஷலிச சமுதாயத்தை உருவாக்குவதுதான் சுதந்திர இந்தியாவில் தங்களுடைய முதல் வேலை என்று ஓயாது கூறுகின்றனர். மாகாண மந்திரிகளும் தலைமையினரைப்

பின்பற்றி சோஷலிச மந்திரம் ஓதுவதில் தவறுவதே கிடையாது. ஆனால், ஜமீன்தாரர்களுக்கு 10 கோடி ரூபாயை—மக்களின் வரிப்பணத்தை—மக்களின் பகைவர்களான சுரண்டல்வாதிகளுக்குச் சுளையாகக் கொடுப்பதுதான் சோஷலிசம்போலும்!

மேலும், 10 கோடி ரூபாயை ஜமீந்தாரர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் முதலாளித்துவ அணிவகுப்பில் கலந்து சுரண்டல் வேலையைத் தொடர்ந்து நடத்தத் துணை புரிவதாகு மல்லவா? உழவர்களை விட்ட சனியன் தொழிலாளிகளைப் பிடிப்பதா?

ஜமீன்தாரி ஒழிப்பு மசோதாவில் இனும்தாரர்களையும் சேர்க்க வேண்டும். இந்த இனும்தாரர்களில் மிகப் பெரும்பாலோர் ஜமீன்தாரர்களின் சிருஷ்டியாகும். ஆகவே, ஜமீன்தாரித்துவத்தோடு சேர்த்து இனும்தாரித்துவத்துக்கும் இறுதிச் சடங்கு நடத்தியாக வேண்டும். ஆனால், இனும்களை மசோதாவிலிருந்து விலக்க வேண்டுமென்று பத்திரிகைகள் பத்தி பத்தியாகத் தீட்டுகின்றன. சட்ட நிபுணர்கள் புத்தகக் கட்டுகளைத் தூக்கிக்கொண்டு புரட்சி செய்கின்றனர். கடவுளைக் காட்டி கருணைக்கு மனுப் போடுகின்றனர். ஆம். கோயில் இனும்களுக்கு விதிவிலக்கு வேண்டுவது மிக மிக அவசியமென்று கூக்குரலிடுகின்றனர்.

ஜமீன்களோடு சேர்த்து இனும்களையும் ஒழிக்க வேண்டுமென்று அரசாங்கத்தார் ஆரம்பத்தில் கருதினர். மசோதாவிலும் விதிவகுத்தனர். ஆனால்

ஜமீன்களை நஷ்டயீடு கொடுத்தேனும் ஒழிக்க வேண்டுமென்பதற்கு ஆதரவு காட்டிய தேசியத் தாள்களும், தலைவர்களில் சிலரும், சட்ட நிபுணர் களும் கிளர்ச்சி செய்தனர். கோயில்கள், மடங்கள் போன்ற அறநிலையங்களின் இனும்களையேனும் மசோதாவிலிருந்து விலக்க வேண்டுமென்று மன்றாடினர். தலைமை அமைச்சர் ஓமந்தூராரின் சமய உணர்ச்சி இனும்தாரர்களுக்குச் சாதகமாய் அமைந்தது. காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் அமைச்சர்கள் அற நிலையங்களின் இனும்களுக்கு ஆதரவு காட்டினர். என்றாலும், காங்கிரஸ் கட்சியினர் இனும்கள் எல்லாவற்றையும் அடியோடு ஒழிக்கவேண்டுமெனத் தீர்ப்பளித்து விட்டனர். காங்கிரஸ் கட்சியினரின் துணிவுக்கு வாழ்த்து கூறுகிறோம்.

ஆனால், அமைச்சர்கள் தாங்கள் முதலில் நினைத்ததற்கு மாறாக எதிர்ப்புக்கஞ்சி இனும்தாரர்களுக்கு இணங்கிவிட்டதைக் கண்டிக்காமல் இருப்பதற்கில்லை.

ஸ்ரீ

வங்கம் வழிகாட்டுகிறது

தமிழகத்திலே சமயத் துறையில் வடமொழியை விலக்கி வைக்க வேண்டுமென்று சொல்வோரெல்லாம் வடமொழிப் பகைவர்கள் என்று நையாண்டி செய்த காலம் உண்டு. இறைவன் கோயிலிலே, அதுவும் தமிழ்த் தெய்வமென்று சைவப் பெரியார்கள் ஏடெழுதிப் போற்றிய முருகன் திருக்கோயிலிலே தமிழுக்கு இடமில்லாத கொடுமையை எவரே பொறுக்க முடியும்.

வங்காளத்தில் மிகப் பெரிய திருவிழாவாகக் கொண்டாடப்படுவது காளிகோயில் திருவிழாவாகும். அவ் விழாவில் இவ்வாண்டு சம்ஸ்க்ருதத்தை விலக்கிவைத்து, வங்க மொழியில் வழிபாடுகளை நிகழ்த்துவதென்று விழாக் கமிட்டியார் முடிவு செய்துள்ளனர். சுதந்திர இந்தியாவில் வங்க மொழி வாழ்வு பெற்றுவிட்டது. வடமொழி, பேச்சு வழக்கில் மறைந்ததுபோல பிற துறைகளிலும் விடைபெற்றுக் கொள்ளும் வேளை வந்துவிட்டது என்பதை வங்கம் எடுத்துக் காட்டிவிட்டது. இதைக்கண்ட பிறகேனும் தமிழகம் கண் விழிக்குமா? 'முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பான் முருகன்' என்று பெருமை பேசும் சைவர்கள் இறைவன் கோயிலில் தமிழுக்கு உரிமை தேடித் தருவார்களா?

ஆதித் தமிழனுக்கு ஆலயத்தில் உரிமை தந்த அரசியலார் அவனைப் பெற்றெடுத்த ஆதித் தமிழுக்கு உரிமை அளிக்கச் சட்ட மியற்றுவார்களா? மொழிப் பற்றுடையவர் முனைந்துவிட்டால் இவை முடியாதனவல்ல.

●

தமிழென்னும் போதே....

"தமிழன்"

தமிழென்னும் போதே — உள்ளம்
தாவிக் குதிக்குதடா!
அமிழ்தின் இன்னிசையாம் — அதனை
அள்ளிப் பருகுதடா!

கற்பனை வடிவாம் — இனிய
காவியந் தனிலும்
அற்புத ஓவியத்தும் — நெஞ்சம்
ஆழ்ந்து விட்டேனடா!

வள்ளுவர் குறளும் — புகழ்
வாய்ந்த கம்பனுமே
மெள்ள அறிந்தபின்னர் — உனக்கு
வேறொன்று வேண்டுமோடா?

சிலப்பதி காரம் — சுவைதான்
தேனுங் கசக்குதடா!
கலப்பில் இன்பமடா — இனிய
கலைவடி வமடா!

அ

தெய்வப் பழமறைதான் — தமிழில்
தேவாரப் பெருநூல்
உய்வுபெறு வதற்கே — அதற்
குவமையுண் டோடா?

அன்பின் அருள் வீரம் — தனில்
ஆழ்ந்த புறப்பாட்டும்
இன்ப அகப்பாட்டும் — இணை
யில்லாச் செல்வமடா!

வென்றி தரும்வீரம் — புகழ்
வேந்தர்செங் கோல்மாண்பு
என்றுமுயர் தவமே — தீயும்
ஏவல் கொளுங் கற்பு

இவ்விதம் வாழ்வினிலே — உயர்
வெய்தி யிருந்தோமே
எவ்விதமோ இழந்தோம் — இனி
ஏறும் வகைபுரிவோம்!

மொழியும் வழியும்

"ஞானம்"

தமிழ் "மறுமலர்ச்சி" பெற்று வருகிறது என்று எல்லோரும் சொல்லுகின்றனர். மறுமலர்ச்சி என்பதன் பொருள் என்ன? காலத்திற்கேற்றவாறு மக்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் வகையில் எளிய தமிழில், இனிய நடையில், புதுப்புது நூல்கள் தோன்றுவதேயாகும். அவை தமிழ் மொழியில்மட்டுமல்லாமல் தமிழ் வழியிலும் அமைந்திருத்தல்வேண்டும்.

முதலில் மொழியை எடுத்துக்கொள்வோம். தமிழ் மொழியில் நூல் எழுதும்போது அம் மொழிக்குரிய மரபை மறந்துவிடக்கூடாது. பிறமொழிச் சொற்களைத் தேவையில்லாத இடத்தில் கலப்பது தமிழ் மொழிக்குத் தீங்கு செய்வதாகும். பிறமொழிச் சொற்களைக் கலத்தல் கூடாது என்போரை "தனித் தமிழ்ப் பித்தர்" என்று தமிழ் மொழிப் பகைவர் எள்ளி நகையாடுகின்றனர். ஒரு சில தமிழறிஞரும்கூட பிறமொழிச் சொற்கள் கலவாத தமிழுக்கு 'தனித் தமிழ்' என்று கூறத் தயங்குவதில்லை. இவை இரண்டும் தவறாகும். முன்னது இறுமாப்பால் எழுவது; பின்னது மயங்கிப்பேசுவது. உண்மை என்ன

வெனில், 'தனித் தமிழ்' என ஒரு மொழியே இல்லை. தமிழில் பிறமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்துவிட்டது வேண்டுமானால் அதைக் 'கலப்புத் தமிழ்' என்று நாம் நகையாடலாம். அஃதின்றி 'தனித் தமிழ்' என்று உண்மைத் தமிழ்ப் பற்றுடையோரே கூறிக்கொள்வது எளனம் செய்வோருக்கு இடந்தருவதாகும்.

பிறமொழிச் சொற்கள் தேவைப்படுமானால் அவற்றை எடுத்துக்கொள்ள இடர்ப்பாடு ஒன்றுமில்லை. அதற்குத் தமிழ் இலக்கணமும் இடம் தருகின்றது. ஆனால் பிற மொழிச் சொற்கள் தேவைப்படுவது எங்கு? இதை அறிந்து கொள்ளும் திறம் தமிழ் எழுத்தாளருக்கு இருத்தல் வேண்டும். திருக்குறள்போன்ற சங்க நூல்களை கற்றார்க்கன்றி அந்த திறமை வாய்த்தலரிது. இத்தகையார் எழுதும் நூல்கள் தமிழ் வழியில் அமையாததோடு, தமிழ் மொழியிலும் இருப்பதில்லை. சான்றாக சிலவற்றை ஆராய்வோம்.

பிறநாடுகளிலிருந்து புதிது புதிதாகக் கண்டு பிடிக்கப் படும் விஞ்ஞானக் கருவிகள் எந்த நாட்டில் கண்டுபிடிக்கப் பட்டதோ அந்த நாட்டுக்குரிய மொழியில் பெயர் தாங்கி நம் தமிழ் நாட்டுக்கு வருகின்றது. சான்றாக, "ஏரோப் ளேன்" மேல் நாட்டில் கண்டு பிடிக்கப்பட்டது. அதை நம் நாட்டில் 'ஆகாய விமானம்' என்ற பெயரால் அழைக் கின்றனர். 'ஆகாய விமானம்' என்பது தமிழ்ச் சொல் லல்ல; வடமொழிச் சொல். தமிழில் 'வானூர்தி' என்றே அழைத்தல் வேண்டும். இப்படிச் சொன்னால், குறுகிய மொழிப்பற்று என்று குறை கூறுகின்றனர். ஆனால்,

'ஏரோப்ளேன்' என்ற ஆங்கிலச் சொல்லானது 'ஆகாய விமானம்' என்று வடமொழியில் பெயர்க்கப்படுவதில் குறுகிய மொழிப்பற்று இல்லையானல், அதை 'வானூர்தி' என்று தமிழ்ப்பெயரால் அழைப்பதுமட்டும் எப்படி குறுகிய புத்தியாகும்? அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட 'ஆட்டம் பாம்' தமிழில் 'அணுகுண்டு' என்று வழங்கப் படவில்லையா? "தமிழில் வருவதில் குற்றமில்லை. ஆனல், எளிதில் புரியவேண்டும்" என்பார் சிலர். வானத்தே ஊர்ந்து செல்வதால்ஏரோப்ளேனை வானூர்தி(வான் + ஊர்தி) என்று சொல்கிறோம். இதில் புரியாதது என்ன இருக்கிறது? ஆனல், புரியும் தமிழில்தான் எழுதவேண்டும் என்று வழக்காடும் நண்பர்கள், பெயருக்கு முன்னை "திருவாளர்" என்பதற்குப் பதிலாக "ஸ்ரீமான்" என்றும் "வணக்கம்" என்பதற்குப் பதிலாக "நமஸ்காரம்" என்றும் "மொழி" என்பதற்குப் பதிலாகப் 'பாஷை" என்றும் எழுதுகின்றனர். இவர்கள் ஷை தமிழ்ச்சொற்கள் எல்லாம் புரியாதன என்று கருதுகின்றனரா? அப்படி ஒன்றுமில்லை. உள்ளத்தில் ஒரு மொழியும் உதட்டில் ஒரு மொழியும் கொண்ட கோளாறேயாம்.

பண்டைநூற் புலவர்களெல்லாம் பிறமொழிச் சொற்களைக் கையாளவில்லையா? என்று கேட்கலாம். உண்மைதான். ~~பண்டைநூற் புலவர்களும் பிறமொழிச் சொற்களைக் கையாண்டதுண்டு.~~ செய்யுளுக்குத் தேவைப்பட்ட இடத்தில்தான் அப்படிக் கையாண்டார்களென்பதை

மறந்துவிடக்கூடாது. மேலும், தமிழர் என்ற இன வுணர்ச்சி ஒன்றே மொழித் துறையில் ஆட்சிகொண் டிருந்த பண்டைக்கால நூல்களில், சிற்சில விடங்களில் தான் வடமொழிச் சொற்கள் இலைமறை காயென இடம் பெற்றிருக்கின்றன. ஆனால் பிற்காலத்தில் ஆரியப் பண்பு கள் தமிழகத்தில் படையெடுத்தபோது இனவுணர்ச்சி மறைந்து சமயப்போர் மூண்டெழுந்தது. அப்போது பல் வேறு சமயங்களின் சார்பாக தமிழில் எழுதப்பட்ட சமய நூல்களில்தான் வடமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந் தன. பின்னர் அராபியர் தமிழகத்தில் குடி புகுந்தபோது அராபியச் சொற்களும் அதன்பின்னர் ஆங்கிலேயர் ஆட்சி புரிந்தபோது ஆங்கிலச் சொற்களும் தமிழ் உரைநடை நூல்களிலும் பேச்சு வழக்கிலும் பெரிதும் கலக்கலாயின. எனவே தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடுவோர் இடைக்காலத் தில் தமிழை அடிமைகொண்ட வடமொழி, ஆங்கிலம் போன்ற பிறமொழிச் சொற்களை விலக்கி மீண்டும் தமிழைப் பழைய நிலைக்குக் கொண்டுவரப் பாடுபடவேண்டும்.

பிறமொழிச் சொற்கள் உரை நடை நூல்களுக்குத் தேவையே இல்லை, ஏனெனில் தமிழ் தனித்தியங்கும் மொழி. இன்றுங்கூடத்தான். ஆனால், செய்யுள் இயற்றுவோர் பாவின் நயங்கருதி பிறமொழிச்சொற்களைக் கைக்கொள்வதா யினும், தமிழ் மரபை மறத்தல் கூடாது. சான்றாக தர்மம் என்ற வடமொழிச் சொல்லைக் தருமம் என்று எழுத வேண்டும். மற்றும் தேவையற்ற இடத்திலெல்லாம் வடமொழி

எழுத்துக்களைத் தமிழில் கலத்தல் கூடாது. லக்ஷ்மணன் என்பதை லட்சுமணன் என்று எழுதுவதே முறை. தமிழில் மிகப் படித்தவர்கள் கூட சுப்பிரமணியன் என்று எழுதாமல் ஸுப்பிரஹ்மண்யன் என்றே எழுதுகின்றனர். இதில் சு என்ற தமிழ் எழுத்துக்கும் ஸு என்ற வடமொழி எழுத்துக்கும் உச்சரிப்பில் வேற்றுமை உண்டென்று வழக்காடலாம். ஆனால் தமிழனுடைய நாக்குக்கு உச்சரிப்பை உணரும் திறனுண்டு என்பதை இவர்கள் அறியார்போலும்.

" சிதம்பரம் நகர் "

கடந்த செப்டம்பர் 24ஆ சென்னை துறைமுகத் தொழிலாளர் சங்கப் பொதுக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது:

"தற்போது 'ஜார்ஜ்டவுன்' என்று பெயருள்ள பிரதேசத்திற்கு கப்பலோட்டிய தமிழரும்—தொழிலாளர் தலைவருமான வ. உ. சிதம்பரம் பிள்ளையின் ஞாபகார்த்தமாக 'சிதம்பரம் நகர்' எனப் பெயரிட வேண்டுமென்று சென்னை நகரசபையாரையும், அரசாங்கத்தாரையும் இக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது".

மேற்படி தீர்மானத்துக்கான காரணங்களை விளக்கி திரு. ம. பொ. சிவஞானம் பேசினார். நகரசபை உறுப்பினர் திரு. ஜி. ராஜமன்னார் தலைமை தாங்கினார்.

Regd. T. M. No. 110920

" ஸ்வஸ்திக் "

இங்க்

பவுண்டன் பேனாக்களுக்கு
பரிசுத்தமான பிரஞ்சிந்திய
தயாரிப்பை ஆதரிக்க
யாவரும்
உபயோகியுங்கள்

SWASTIK INK MANUFACTORY
(*Prop*:—**N. R. N. Chari**)
PONDICHERY

உறங்காதே தோழா!

(1)

தான்ஆள உலகமெலாம் தனக்கடிமை யாகத்
தனியரசு புரிவதற்கு "ஊர்க்கொள் ளைசெய்தல்
கோன்நீதி" எனஉரைக்கும் கொடியர்செயல் மாளக்
கொல்லுதற்கு முனைகின்ற நல்லவர்கள் தம்மைத்
தான்தோன்றி இராஜத்துரோகி' எனக் கூறும்
தடித்தஒரு சட்டத்தின் தலையெழுத்தைக் காட்டி
ஊன்பதைக்கத் தூக்கிலிடும் உதவாத ஆட்சி
ஒழிவதற்கு வாளெடடா உறங்காதே தோழா!

(2)

கூழின்றிக் குடும்பமெலாம் குடல்சுருண்டு மாளக்
கோடிபணக் காரர்களாய் கொழுத்துண்டு வாழ
ஊழிதொறும் உழைப்பாளர் குருதியெலாம் வாரி
உறிஞ்சுகின்ற முதலாளி வருக்கத்தின் செயலைப்
பாழ்செய்ய முனையாது பணம்மென்மேல் சேர்க்கப்
பலவழியும் அவர்க்குதவி புரிகின்ற அரசை
ஆழியிலே கரைத்தொழிப்போம் அஞ்சாதே எழுந்து
ஆணவமாய் வாளெடடா உறங்காதே தோழா!

(3)

(வேறு)

பொய்புரட்டு வேதமெலாம் சொல்லிச்சொல்லி
பேதைகளாய் இந்நாட்டை இருட்டில் தள்ளி
செய்யாத தொழிலனைத்தும் செய்யச்சொல்லிச்
சூழ்ச்சியால் தாம்கொழுக்க உணவையெல்லாம்
நையாமல்உண்(டு) ஒதிபோல் பருத்த மாக்கள்
நகைக்கின்றார் இன்றெமது நிலையைக்கண்டு
உய்யும்வழி யறிந்துவிட்டோம் வாளெடுத்து
ஒருநொடியில் கொடுமைஒழி உறங்கிடாதே!

கூ. ஆறுமுகம்

அட்டைப்பட விளக்கம்

குழந்தைகளே ஒரு நாட்டின் உண்மைச் செல்வங்களாகும். அவர்களின் நிலையை ஒட்டியே நாட்டின் சிறப்பு விளங்கும்.

நம் நாட்டின் இன்றையநிலையை எளிதில்விளக்குகிறார்கள் இந்தச் சிறுவர்கள். ஏக்கத்தின் சாயலே காணமுடியாத இன்ப நகை தவழும் இனிய முகங்கள்; ஆயினும், அவர்கள் உடலிலோ வறுமையின் சின்னங்களான கோவணமும் கந்தலுடையும்.

"இந்த நிலையை மாற்றியே தீருவோம். அதற்காக ஒன்றுபட்டு நின்று தோளோடு தோளிணைந்து அணிவகுத்து எத்தகைய எதிர்ப்புகளையும் மகிழ்ச்சியோடு ஏற்று இறுதியில் வெற்றி காணுவோம்!' என்று அவர்கள் ஆனந்தப்பள்ளு பாடுகிறார்கள்!

இந்தியாவின் ஒருமையும் தேசிய இனங்களின் உரிமையும்

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

தரைப் பரப்பு உடலம்; தரையில் வாழும் மக்களே அதற்கு உயிர். மக்களில்லாத பாழுந்தரை உயிரற்ற பிணம்; தரையில் நிலையாக வாழாத நாடோடி மக்கள் உடலற்ற பேய். நாட்டில் நிலைத்து வாழும் குடிகளே உடலோடு உலாவிவரும் உயிர்விளக்கங்கள். அரசியல் ஆராய்ச்சியாளர் இவற்றை வேறுபிரித்து ஆராயும்போது பல முறை மயங்குகின்றனர். மக்களைத் தனித்து ஆராய்ந்து காண்கின்றனர். அவர் பண்பாடு, மொழி, வாழ்வு இவையெல்லாம் தோன்றுகின்றன. இந்த இன ஒற்றுமையில் ஈடுபட்டுப் பிறிதெல்லாம் மறக்கும் போது அடிப்படையான பூகோள ஒற்றுமை கண்ணிலும் கருத்திலும் படாமல் மறைகிறது. மக்கள் வாழும் இயற்கைப் பரப்பு அவர்கள் வாழ்வினை இயக்கி உருப்படுத்திவரும் உண்மையே நினைவிற்கு வாராமற் போகிறது. இயற்கைப் பரப்பின் இயல்பினையும், புதையலையும், செழுமையினையும் ஆராயும்போது நாட்டின் ஆக்கம் எல்லாம் மக்களது பண்பாட்டிற்கேற்ப மாறி நிற்பது மனத்திற்கு வருவதில்லை. மக்களது வேறுபாடுகள் அப்போது மறைகின்றன. பூகோள ஒற்றுமை மட்டுமே தோன்றுகிறது; இன ஒற்றுமை வேற்றுமை தோன்றுவதில்லை. இவ்வாறு ஒன்றினைவிட்டு ஒன்றினை வற்புறுத்துவதால் உலகில் எழுந்த அரசியற் குழப்பங்கள் பல.

பூகோள ஒற்றுமையை மட்டும் கண்டால், சுரண்டற் கொள்கையில் எழுந்து உலகினை அளக்கும் சாம்ராஜ்யமே—பெரு வல்லரசே—வளரும்.

இன ஒற்றுமையை மட்டும் கண்டால், இனவேற்றுமையால் உலகம் சிதறுண்டுபோக இனப்போரே மூளும். இவை இரண்டினையும் ஒற்றித்து இயைய வைத்துப் பார்த்து அரசியல்வழி அமைப்பதே

அறிவுடைச் செயலாகும். இதற்கு ருஷியா உலகத்திற்கே சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. பூகோள ஒற்றுமையோ, வரலாற்று ஒற்றுமையோ குலையாது ருஷியா விளங்குகிறது. இயற்கைச் செல்வஞ் சிதையாது சிறந்தோங்குகிறது. ஆனால், ருஷியாவில் வாழும் மக்கள் பலபல மொழி பேசுவோர்; பலபல பண்பாட்டினர். முன்னெல்லாம் அந்த வேறுபாடுகளை ஒழிப்பதனையே ருஷிய துரைத்தனம் கடமையாகக் கொண்டது. ஆனால் லெனினே ஒவ்வொரு மொழியும், ஒவ்வொரு பண்பாடும் வளர ஒவ்வோர் இனத்தினையும் ஒவ்வொரு நாடாகப் பிரித்தனர். அவையும் சுயநிர்ணய உரிமைபெற்று வளர்ந்தன. தம்மை நசுக்கி அழிக்கும் முயற்சி நடுவிடத்தே இல்லாதது கண்ட இந்த நாடுகள், முழுஉரிமை பெற்ற பின்னரும் தாமாகவே வந்து ருஷியக் குடியரசுக் கூட்டுறவில் கலந்துகொண்டன. 150 பேர் பேசும் மொழிக்கும் அங்கு ஒரு தனியிடம் உண்டு. மக்கள் வாழ்வு மொழிவகையாக அன்றோ நாகரிகப் பண்பாடாக உயர்ந்தோங்குகிறது? மொழியை வளர்த்து இனஉணர்ச்சியைப் பெருக்கி வாழ்வினைச் செம்மைசெய்து பண்பாடு புத்துயிர் பெற்று உலகிற்கு வழிகாட்ட வரும்போதன்றோ அரசியலின் பெருமையும் உலகின் ஒற்றுமையும் என்றென்றும் அழியாமல் இருக்கும்? இதனைக் கண்ட லெனின் துரைத்தனம் 150 பேர் மட்டும் பேசும் மொழியிலும் நூல்கள் வெளியிட்டு அதனை வளர்க்கின்றது. ருஷிய நாட்டு இயற்கைப் பரப்பின் ஒருமையையும், அந்நாட்டு மக்களது இனப் பன்மையினையும் தம் பரந்த அறிவுகொண்டு ஒற்றுமைப்படுத்திய பெருமை லெனினைச் சாரும். இனஉணர்ச்சியை உலக ஒற்றுமைக்குப் பயன்படும் வகையில் வளரவிட்டு உருப்படுத்தித் திருத்தாது, இனஉணர்ச்சி என்ற எரிமலை கீழே புகைவதனையே அறியாமல் "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்" என்று கூவிக் குலைவது வெற்றுரவாரமே என்பதனை லெனின் வழியே ஸ்டாலினும் அறிந்துள்ளார்.

காந்தியடிகள் விடுதலைப்போரில் நுழைவதற்கு முன்னர் இந்தியாவின் பூகோள ஒற்றுமையே எதிர் தோன்றியது. உடையிலும்

உணவிலும் மொழியிலும் வழியிலும் வேறுபட்டால் வேறு எந்த ஒற்றுமையைக் காணமுடியும்? வேற்றுமையை வளர்த்து அவற்றிடையே ஒற்றுமை காணும் ஆற்றல் அந்நாளில் இல்லை. உலகிடை வாழவந்தாலன்றோ பலவகை மொழிகளிலே எழும் பலவகை ஏழைக் குரல்களும் பட்டினிப் பண்ணையே பாடுகின்ற துன்ப இசை கேட்கும்; பலநிற உடைகளிடையேயும் கந்தைப் புராணக் காட்சி தோன்றும்; பலவகை உணவிடையேயும் வயிற்றுக்குப் போதாத சப்பிட்ட சுவை தோன்றும். விடுதலை என்றால் இவற்றினின்றும் விடுதலை; பலபல மொழியில், பலபல பேசிப் பலபல இன்பப் பாடல் பகரும் விடுதலை; பலபல உடைகளும் அணிய விடுதலை; பலபல வகையான பலபல சுவையுள்ள உணவினை உண்ண விடுதலை; பலவகை மணிகளை அழகுபடப் பதிக்கக் கைத்திறம் வேண்டும். பலவகை மணமலர்களைப் பாங்காகக் கோர்க்க மலர் வாழ்விற் பழக்கம் வேண்டும். பலவகைச் சுவையும் வாயிற்கினிக்கச் சமைப்பதற்குக் கைபாகமும் செய்பாகமும் வேண்டும். மக்களொடு மக்களாய்த் தோளொடு தோள் உராய வாழ அஞ்சி மேடை மேலேயே வாழ்வோருக்கு இவை எல்லாம் தெரியுமா? மேடைப் பேச்சாளர் தம் பூகோளப் படத்தில் இமயமுதல் குமரி வரை விளங்கும் பரப்பினைக் கண்டனர். ஒருபுறம் உலகிலேயே உயர்ந்து விளங்கும் இமயமலைச் சுவர் மற்றைப் புறங்களில் பெருங் கடலே அகழியாக இயற்கையிலே அமைந்திருக்கும் அழகு கண்டனர். இந்த ஒருமைப்பாட்டினையே கருதி வாழ்ந்தனர். இந்திய விடுதலைப் போரில் இந்தியாவில் வாழும் பலவகைப் பண்பாடுகளையும், பலவகை மொழிகளையும் அடியோடு மறந்தனர். சென்னை மாநில வட்டம், பம்பாய் மாநில வட்டம் என்றே தனித்தமிழ் பேசுவோரும் எண்ணவும் பேசவும் தொடங்கினர். சென்னை மாநில வட்டம் என்பது இயற்கைப் பரப்பன்று; செயற்கைக் குழப்பமேயாம். ஆந்திர நாடும், தமிழ் நாடும், கன்னட நாடும், மலையாள நாடும் சேர்ந்தது அது. அந்த மொழிகளின் கழுத்தை இறுகப் பிடித்துக்கொண்டு ஆங்கில (மொழி) ஆரவாரஞ் செய்து கொக்கரித்தது. சுரண்டற் பேயாய் நாடு ஒரே வாயாய் விழுங்கிவந்த பெருவல்லரசுக்கோ வாயிற் புகுவ

தெல்லாம் ஒருவாயாக ஒன்ருய்ப் போவதற்கேற்ப ஒரே விழுங்காய் விழுங்கிய சென்னைமாநில வட்டம் ஒன்றே எனத் தோன்றியது. ஆண்டான் பேச்சையே அடிமையும் பேசுவது வழக்கம். அந்த அடிமைக் குடிவெறி ஒழியாமையால் இன்றும் சென்னை மாநில வட்டத்தினைத் ‘திராவிட நாடு’ எனப்பேசி நிலைநிறுத்தும் முயற்சிகள் விடுதலையின் பேரால் எழுகின்றன அன்ரே?

இந்த அடிமைக் கோலத்தின் அடிப்படை என்ன? இனஉணர்ச்சியை எழவிடாமல் அழித்தொழிப்பதே ஆம். ‘செந்தமிழ் நாடு எனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே, எங்கள் தந்தையர் நாடு என்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே’. இந்த இன்பமும் சக்தியும் பிறந்தால் மட்டுமே மக்களைத் தட்டி எழுப்பி அடிமைக் கோட்டையைத் தகர்த்தெறிய முடியும். வறட்டு ஆங்கிலப் பேச்சு உள்ளத்தில் ஊருது; இரத்தத்திற் பாயாது. மொழி என்ற அடிப்படையில் எழும் இனஉணர்ச்சி வழியே தமிழ் நாடு, ஆந்திர நாடு என இந்தியாவை மொழிவகை நாடுகளாகப் பிரிக்க வேண்டும் என்ருர் காந்தியார். உடனடியாக அந்தப் பிரிவினையையே அடிப்படையாகக் கொண்டு காங்கிரஸ் தன் அமைப்பை வளர்க்கவேண்டுமே அன்றி அடிமையின் அடையாளமாம் மாநில வட்டங்களின் பெயரையும் வழங்கலாகாது.

இந்த உண்மையை உணராமையால்தான் எங்கும் ஐயம் எழுந்தது; வெறுப்பு பொங்கியது; சண்டை மூண்டது. இந்திய நிலப்பரப்பின் இயற்கை ஒற்றுமையை மட்டும் மனத்தில் வைத்துக்கொண்டு மக்களுணர்ச்சியைப் பிறர் மறந்ததன்பயனுக இந்திய நாடு இன்று இரு துண்டாகத் துடிதுடிக்கிறது. இவ்வாறே இனஉணர்ச்சியின் ஆற்றலை உணர்ந்து மொழிவகை நாடுகளைப் பிரியாமல் வற்புறுத்தி வாட்டினுல் ஆந்திரர்—“மதராஸ் சலோ” “க்விட் மதராஸ்” எனத் தாமறியாத வேறு மொழிகளில் வெறிகொண்டு கூவியலறுவதுபோல நாடு முழுதும் வெறியேறி நாட்டினைப் பலபல துண்டுகளாக வெட்டிப் பிளக்கின்ற கொடுங் காட்சியைக் காணும்

வரும். "தண்ணீர் விட்டோ வளர்த்தோம் இந்தப் பயிரை--சர்வேசா! கண்ணீர்விட்டே வளர்த்தோம் கருகத் திருவுள்ளமோ" என்ற பாரதியார் பாட்டு எவ்வளவு பொருத்தமானது? இயற்கை ஒற்றுமையை மறப்பது பெருங் கேடாம்.

ஆனால், இயற்கை ஒற்றுமைக்காக மக்கள் வாழ்வின் இன்ப விளக்கங்களாம் மொழிகளையும் பண்பாடுகளையும் அழித்தொழித்தல் அழகன்று; ஆண்மையுமன்று; அறிவும் அன்று. அத்தகைய இருட்டடைப்பிலேயன்றோ இந்தியப் பாகுபாடு இன்று வளர்ந்துள்ளது. அவற்றை அவிக்கும் முயற்சிகள் எங்கும் வெற்றி பெற்றதில்லை. ஜர்மனியும் ருஷியாவும் அடியோடு தேய்த்தொழிக்க முயன்றும் போலந்தின் மொழியோ கலையோ மறைந்தொழிந்ததா? புத்துயிர் பெற்றன்றோ பொலிகிறது. இந்த உண்மையைக் காந்தியடிகளும் உணர்ந்ததன் பயனாக இதனை இன்றும் வற்புறுத்துகின்றார். இந்தியாவின் இயற்கை ஒற்றுமையையும் உடனுக்குடன் அப்பெரியார் வற்புறுத்தி வருவதால் இனஉணர்ச்சியின் உண்மையை அவர் வற்புறுத்துகின்றார் என மக்கள் நன்கு உணராமற் போகின்றார்கள்.

இன உணர்ச்சி இனியது; இனவெறி கொடியது. மக்கட் பண்பாட்டின் வேற்றுமை இந்திய இயற்கை ஒற்றுமையை மாற்றியமைக்க முடியாது. இமயமலை பாஞ்சாலத்தின் இடையே வந்து விழ முடியாது; விந்திய மலை வங்காளத்தின் இடையே வந்து மேலோங்கி வளரமுடியாது. ஆறுகள் மாறிப் பாயா. சுரங்கங்கள் உள்ளுக்குள்ளாக ஓடிப் பாயமுடியாது. உலகம் ஒன்றாய் இயைந்து விளங்குகிறது என்று அறிஞர்கள் வற்புறுத்தும் இந்தக்காலத்தில் இந்தியாவின் இயற்கை ஒற்றுமையை மறக்கமுடியாது. வயிற்றிற்கு உணவின்றிப் பட்டினி வருமோ என அஞ்சித் தடுமாறும் இந்தத்தறுவாயில், உலகம் எல்லாம் ஒரு குடும்பமாய் உணவைப் பங்கிட்டு வாழவேண்டும் என வற்புறுத்தும்போது, உலகத்தின் உதவியை நாடும் இந்தியாவிலும் அவ்வாறு வற்புறுத்தாமல் இருக்கமுடியுமா? ஆந்திர நெல்லைத் தமிழ் மந்திரிக்குத் தரலாகாது என்ற இன வெறியை வளர்ப்பது தகுமா?

ஆகையால் காந்தியடிகள் இந்திய ஒற்றுமையை வற்புறுத்துவதனைத் திரித்தும் பொருள் கொள்வதில் பயனில்லை. அந்தப் பேச்சன்று அவர் கண்ட புதுப் பேச்சு. அது அவருக்கு முன் உள்ளோர் எல்லாம் பேசிய பழம்பேச்சேயாம் என்றாலும், அதிலே பெரியதோர் உண்மை உண்டு என்பதனை மறத்தல் கூடாது.

அவர் பேசும் புதுப்பேச்சு மொழிவகை நாட்டினைப்பற்றியதே ஆம். "பீகார் பீகாரிகளுக்கே என்று கூறுவது சரியே" என்கிறார். ஆனால் "பீகார் இந்தியாவுக்கும் ஆம்" என்று ஒரு திருத்தப் பாட்டும் பாடுகிறார். ஆதலின் காந்தியார் "தமிழ் நாடு தமிழருக்கே" என்று ஆனந்தப் பள்ளுப் பாடுவார் எனச் சொல்லவேண்டுமா? ஆங்கிலம் வீற்றிருந்த இடத்தில் நாட்டு மொழிகள் சிறந்தோங்கவேண்டும் என வற்புறுத்தும் காந்தியார் தமிழினை முதன் மொழியாக்கப் பெருந் தொண்டு செய்பவர் அன்றோ? இந்தியாவில் உள்ள அனைத்து மொழிக்கும் அனைத்து நாட்டிற்கும் இவ்வாறு தொண்டுபுரியும் பெருமை அவருக்கே உண்டு. பிறர் எல்லாம் இவ்வாறு செய்யாததன் காரணம் உண்மை இந்தியாவின் உயிர் நாடியாம் ஒற்றுமையை இவர் போல அவர்கள் அறியாமையேயாம். பாகிஸ்தான் தனியே பிரிந்ததனை அவர் ஒப்புக்கொண்டது சுய நிர்ணயக் கொள்கையில் அன்றிருந்து இன்றுவரை வாழ்ந்ததன்பயனே ஆம். அஸாம் தனியே பிரியவேண்டும் என அந்நாடு ஒருமுகமாக விரும்புமானால் அது தனி நாடாகத்தான் அமைதல்வேண்டும் எனத் தெள்ளத்தெளிய அறுதியிட்டுக் கூறவில்லையா? பட்டாணியர் தனிநாடாக அமைய விரும்புவதனைப் பாகிஸ்தான் ஒப்புக்கொள்ளுவதே தக்கது என்று அறிவுரை கூறிய தனையும் உற்று நோக்குதல் வேண்டும். இவை இடத்திற்கேற்ற பேச்சுக்கள் அல்ல. உள்ளத்துறுதியிலிருந்து தோன்றும் உண்மை நம்பிக்கைகள். "ஒரு கண்ணிற் சுண்ணாம்பு ஒரு கண்ணில் வெண்ணெய்" என்பது அவரிடம் இல்லை. இன உணர்ச்சி வழியே சுய நிர்ணய உரிமை உண்டு என்பதனை இவரினும் பட்டப்பகல் வெட்ட வெளிச்சமாகக் கூறினவர் யார்? தமிழ் நாட்டிற்கும் அத்தகைய உரிமை உண்டு என்பதனைக் காந்தியாரோ மறுப்பவர்?

இவ்வாறு கூறினால் இவர் கண்ட ஒற்றுமைக் காட்சி என்ன ஆயிற்று என்று கேட்கலாம். உரிமை வாழ்வில்தான் ஒற்றுமை விதை விட்டு முளைத்துக் காய்த்துப் பூக்கும் என லெனின் அறிந்ததுபோலக் காந்தியாரும் அறிவார். அதனாலன்றோ ஒருநாள் இந்தியா ஒன்று படும் என உறுதியுடன் நம்பி வாழ்கிறார். இன உணர்ச்சி இன வெறியாக மாறுதலாகாது என்றே இந்திய ஒற்றுமையைக் காந்தியார் வற்புறுத்துகின்றார். அஸாமிலிருந்து பிறர் கடையை மூடி ஓட்டுவதும், பீகாரிலிருந்து பிறரை வெருட்டியடிப்பதும் தமிழன் கனவிலும் காணாத செயல்கள். 'தமிழ் நாடு தமிழருக்கே' என்று வானம் பிளக்கக் கூவும் எந்தத் தமிழனும் தமிழ் நாட்டில் வந்த குடிகளைக் கடலில் வீசி எறிய வடநாட்டு வெறியரைப்போல மறந்துங்கூட எண்ணியதில்லை.

கடலெல்லாம் கப்பலோட்டி உலகொடு பழகி உலகெலாம் வாழும் தமிழன் இந்த வெறியை அறியவும் முடியாது. ஒரிஸ்ஸாவில் ஆந்திரர் படும் பாட்டினைக் கண்டு புலம்பும் ஆசிரியர் அரங்கா இப்போதேனும் தமிழ் உறவின் மாண்பினை அறிந்து தமிழரை எண்ணித் தூற்றும் வீண் பிதற்றுரைகளை விட்டொழிப்பாரா? அசாமியரும் பீகாரினரும் கொண்ட மனப்போக்கினைக் காந்தியார் வெறுத்ததுபோல எந்தத் தமிழன் போக்கினையும் அவர் வெறுப்பதற்கில்லை. வெறியரிடம் இந்தியாவைப்பற்றிப் பேசவேண்டும். அதற்காகவே பேசுகிறார் காந்தியார். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று அன்றும் இன்றும் பாடும் தமிழனிடம் அதனைப் பேச வருவது கொல்லன் தெருவில் ஊசிவிற்கும் கதையாய் முடியும். பீகாரைப் பற்றிப் பேசும்போதும் இன உணர்ச்சியின் உண்மை இயல்பினை வற்புறுத்திப் பேசாது காந்தியார் விடவில்லை. இந்தியப் பிற நாடுகளிலிருந்து பீகாரில் வருவார் சுரண்டற் கொள்கையைப் பின்பற்றிப் பீகாரை நடுத்தெருவில் விடுதலாகாது என்கிறார். முதலாளிகள் முதலாளிகளுடன் சேர்ந்துகொண்டு ஒண்டவந்த பேய் ஊர்ப் பேயை ஓட்டுவதுபோலப் புதிதாக வருவோர் பாட்டாளிகள் உழவர்

கள் முதலிய பழங்குடிகளது வயிற்றில் அடித்தல் கூடாது என்கின்ருர். ஆங்கிலேயரை நோக்கிக் கூறிய பேச்சினையே இந்தியப் பிற நாட்டிலிருந்து பீகாருக்கு வருவோருக்கும் கூறுகின்ருர். "இன வகையான நாடு இன வகையே உயரவேண்டும்; அந்த இனம் சாவப் பார்த்திருக்கமுடியாது; ஆதலின் இன வகையான நாட்டின் முன்னேற்றமே இத்தகைய ஆராய்ச்சியின் அடிப்படை" என்பதனை ஐயத்திற்கிடமின்றிக் காந்தியார் விளக்குகின்ருர். ஆனல் இவ்வாறு இன வகையாக வெறியின்றி முன்னேறினல்மட்டுமே இந்தியா முழுதுக்கும் இன்பமாய் உதவமுடியும் என்பதனை இவரையன்றி யார் உணர்கின்றனர்?

இன உணர்ச்சியின் நுட்பத்தினை இவர்போல அறியாத பிற அரசியல் அறிஞரே அரசியலமைக்கத் தொடங்கியுள்ளனர். வட நாட்டினர்க்குத் தமிழ் நாட்டின் நெஞ்சினைத் திறந்துகாட்ட அஞ்சி நடுங்கும் பெரு மௌனப் பெரியோரும் அரசியல் நிர்ணய மன்றத்தில் வீற்றிருக்கின்றனர், எட்டுச் சுரைக்காய்களும் தளபொள என மேலெழுந்து வேகின்றன. 'நடுவிட அமைப்பு வன்மையுறவேண்டும்' எனப் பலர் பேசுகின்றனர். இதில் தென்னுடு வடநாட்டிற்குச் சோறு தாராதோ என்று அண்டை வீட்டினை நம்பாத வெட்கக் கேடும் உண்டு. இன உணர்ச்சி வகையாக வளரும் நாடுகள் தாமே ஒத்துழைக்க வரும்போது நடுவிட அரசியல் அமைப்பு வலுப்பெறுமே அன்றி நாடுகளின் உரிமைகளைக் குறைப்பதனுலும் பறிப்பதனுலும் வலுப் பெருது. அரசியலமைப்பு அவையிலுள்ளோர் அனைவரும் ஒப்புக்கொள்வதனைப் 'பறிப்பது' என்று பேசலாமா என்று கேட்கலாம்? வாயில்லாப் பூச்சிகள் வாய் திறவாமையால் மனமார ஒப்பின என்று கூற முடியுமா? நாட்டரசியல்கள் இப்போது வாயைத் திறக்கத் தொடங்கி உள்ளன. உண்மை வலிவு நெஞ்சுரந்தான்; புறத்தே பகட்டாகப் பூசி வைப்பதன்று, ருஷியாவைப்போல வலுப்பெற்ற நடுவிட அமைப்பு உலகில் உண்டோ? ஆங்கில நாடும் அமெரிக்காவும் கண்டு நடுங்கும் வன்மை அதற்கு எங்கிருந்துவந்தது? இனவுணர்ச்சியை வளர்த்து இன மக்களின் உள்ளம் எல்லாம் ஒன்றுனமையால் அன்ருே? ருஷியாவில் போல இந்திய இன நாடுகளும் உரிமைபெற்று சிறந்தோங்கி ஒன்றுபட்டு உலகிற்கு வழிகாட்டுவதாகுக.

வாய் திறக்கமாட்டேன்

(மு. வரதராசன்)

"நீங்கள் எப்படி, சாமி, இங்கே வந்து சேர்ந்தீர்கள்?" என்று திகைப்போடு கேட்டான் அவன்.

"இப்படித்தான். உன்னைப்போல் தான்" என்று அக்கறை இல்லாதவன்போல் பதில் சொல்லி முகத்தை அப்பால் திருப்பிக்கொண்டேன்.

"என்னை மறந்துவிட்டாற்போல் தெரிகிறது. நான் தெரியவில்லையா, சாமி?" என்று அவன் கேட்டதும் திரும்பிப் பார்த்தேன். எனக்கு அவன் யார் என்றே தெரியவில்லை. ஒரு வேளை அவன் என்னை அறிந்திருக்கலாம், பட்டணத்தில் பார்த்திருக்கலாம் என்று எண்ணினேன்.

"நீ யார் தெரியவில்லை, அப்பா" என்றேன்.

"என்ன, சாமி! இப்படிச் சொல்கிறீர்களே! நான் உங்கள் பக்கத்து வீட்டிலே......" என்றான்.

எனக்கு அப்போதுதான் நினைவுக்கு வந்தது. பக்கத்து பங்களாவிலே அவனை அடிக்கடி பார்த்தது நினைவுக்கு வந்தது. அந்த வியாபாரியின் வீட்டிலே அவன் சில மாதங்களுக்கு முன்னே வேலைக்காரனாக இருந்தது நினைவுக்கு வந்தது. "ஓ! நீயா அப்பா! செ. பா. ஐயா வீட்டில் வேலை செய்துகொண்டிருந்தாயே! அடடா! சரிதான். மறந்துவிட்டேன், அப்பா. பட்டணத்தில் எத்தனையோ பேரைப் பார்க்கிறோம். மறந்து விடுகிறோம்" என்று நீட்டினேன்.

"என்ன, சாமி! எத்தனை நாள் என்னோடு பேசியிருக்கிறீர்கள்!" என்றான்.

"ஆமாம் அப்பா! நான் தான் சொன்னேனே! மறந்துவிட்டேன்," என்று குரலாலே சரிப்படுத்தினேன்.

"ஆமாம், சாமி. நீங்கள் இங்கே எப்படி வந்து சேர்ந்தீர்கள். மறுபடியும் ஏதாவது காந்தி சண்டையா?" என்று அவன் பழைய கேள்வியைப் புதிய வடிவத்தில் கேட்டான்.

"காந்தி சண்டை எல்லாம் முடிந்துபோய்விட்டது. இப்போது ஏதப்பா" என்று பதில் சொல்லாமலே மறைக்கப் பார்த்தேன். அவனோ விடவில்லை.

"நேற்றுக்கூட யாரோ சொன்னார்களே. பட்டணம் தமிழருக்குச் சொந்தம் என்று காந்தி புதுச்சண்டை போடப்போகிறாராம். ஆந்திராகாரர் யாரோ அவர்களுக்கு வேண்டும் என்று கேட்கிறாராம்" என்று அவன் அறிந்த அரசியலை என்னிடம் கொட்டினான்.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை அப்பா. அப்படிப் பேச்சு இருக்கிறது. அவ்வளவுதான். நம்ம பட்டணத்துக்கு யாராவது சண்டை போடுவார்களா? கட்டின பெண்டாட்டியை யாராவது கேட்டால் விட முடியுமா? கலியாணம் ஆனபிறகு, என் பெண்டாட்டியா, உன் பெண்டாட்டியா என்று சண்டை போடுவது வெட்கமில்லையா?' என்று பழைய கேள்வியை மறைப்பதற்காக முயன்றேன்.

"சரி, அது போகட்டும் சாமி, நீங்கள் இங்கே வந்தது தானே எனக்கு எப்படியோ இருக்கிறது" என்றான்.

இனிமேல் மறைக்கக்கூடாது என்று அப்போதுதான் உண்மையைச் சொல்லத் தொடங்கினேன். அந்தச் சிறைக்குப் போய்ச் சேர்ந்த மூன்றும் நாள் நடந்தது இது. சிறைக்குப் போய் ஒரு மாதம் ஆகிவிட்டபடியால் அவன் பழைய கைதியாக இருந்தான். எனக்கு அந்த இடத்தில் பழக்கம் மூன்றும் நாள் ஆனபடியால் நான் கொஞ்சம் புதியவனாகவே இருந்தேன். அதனால்தான் அவன் என்னை உற்றுப்பார்த்து அடையாளம் தெரிந்துகொண்டு கேட்டான்.

என் கதையைச் சொல்லி முடிக்கும் வரையில் கேட்டுக் கொண்டிருந்தான். அவனுடைய மனத்தின் மயக்கம் அப்போதும் தீராதபடியால் கேள்விகள் கேட்கத் தொடங்கி விட்டான். "சாமி! உங்களுக்கு ஏன் சாமி இந்தத் தொல்லை. சும்மா இருந்திருக்கக்கூடாதா? அந்தக் கூட்டுப்பட்டு ஸ்டேஷனில் எத்தனையோ பேர் இதைப் பார்த்துக் கொண்டு சும்மா போய்விடவில்லையா? நீங்களும் அப்படி வந்துவிட்டிருக்கக்கூடாதா? அவன் அரிசி ஒரு படி எடுத்துக்கொண்டு போனால் உங்களுக்கு என்ன? ஒன்பது படி எடுத்துக்கொண்டுபோனால்தான் உங்களுக்கு என்ன? அந்தப் போலீஸ்காரன் அந்தக் கிராமத்தானை எப்படிப் பேசினால் உங்களுக்கு என்ன? நீங்கள் ஏன் போலீஸ்காரனையும் ஸ்டேஷன் மாஸ்டரையும் எதிர்க்கவேண்டும்?" என்று வருத்தத்தோடு பலவாறு கேட்டான்.

நிலைமையை விளக்குவதற்காக அவனுக்கு விரிவாகச் சொன்னேன். "அப்பா! அரிசி கொண்டுவந்த அவன் ஒன்றும் தெரியாத ஏழை. கண்ணில் நீர் விட்டுக் கெஞ்சினான். போலீஸ்காரனையும் ஸ்டேஷன் மாஸ்டரையும் காலில் விழுந்து கெஞ்சினான். அந்த ஒரு படி அரிசியை அங்கேயே

விட்டுவிட்டுப் போய் விடுவதாகச் சொன்னான். அபராதம் வேண்டுமானாலும் கட்டி விடுவதாக ஒரு ரூபாய் எடுத்துக் கொடுத்தான். பெயர் எழுதி வழக்குப் போடவேண்டாம், குற்றவாளியாக்கவேண்டாம் என்று எவ்வளவோ கெஞ்சினான். அதற்கு முன் நாள் அதாவது வியாழக்கிழமை வீட்டில் குழந்தைகளும் மனைவியும் பட்டினி இருந்தார்களாம். பட்டணத்தில் ஒரு ஏழை பட்டினி இருந்தால் பக்கத்து வீட்டாரும் கேட்கமாட்டார்கள் அல்லவா? அதற்காகப் பணம் எப்படியோ கடன் வாங்கிக்கொண்டு ரயிலில் போய்த் தாம்பரத்துக்குப் பக்கத்தில் ஏதோ கிராமத்திலிருந்து இரண்டு படி அரிசி எடுத்து வந்தானும். வழியிலே யாரோ ஒருவர் மிரட்டிப் பார்த்துப் பாதிப் பங்கு எடுத்துக்கொண்டு அனுப்பினார்களாம். வெள்ளிக்கிழமை ஒரு நாளாவது அரை வயிறுவது குழந்தைகள் சாப்பிடட்டும் என்று எடுத்து வந்தானும். இப்படிப்பட்டவனை மிரட்டலாமா? அழ வைக்கலாமா? அதனால்தான் எனக்கு ஆத்திரம் வந்தது. அதே ரயிலில் மூட்டை மூட்டையாகத் திருட்டு அரிசி போகிறது. பணக்கார வீட்டுக் கலியாணங்களுக்கு கிச்சிலிச் சம்பாவும் ஊசிச் சம்பாவுமாக நல்ல நல்ல அரிசி மூட்டைகள் எவ்வளவோ மூட்டைகள் மோட்டாரில் போகின்றன. அதற்கெல்லாம் அதிகாரிகளே துணையாகவும் காவலாகவும் இருக்கிறார்கள். இந்த ஒரு ஏழைக்கு ஒரு படி அரிசியை விட்டு விடக் கூடாதா என்று ஸ்டேஷன் மாஸ்டரைக் கேட்டேன். இதற்காகப் போலீஸ்காரன் என்னைப் பிடித்துத் தள்ளினான். அதனால்தான் நான் ஓங்கி ஒரு அறை கொடுத்தேன்.'' என்று சொல்லி முடிப்பதற்குள் அவன் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீரைக் கண்டேன்.

சிறிது நேரம் அமைதி நிலவிற்று. பக்கத்து அறையில் யாரோ பாட்டுப் பாடிக்கொண்டிருந்தார்கள். அது பாரதியார் பாட்டுத்தான். "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" என்ற பள்ளுப் பாட்டுத்தான். "எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு" என்ற அடியை அழுத்தந் திருத்தமாக அந்தக் கைதி பாடியது ஏனே தெரியவில்லை. அதற்குப் பதில் சொல்வதுபோல், "இல்லை இல்லை" என்று என் மனச்சான்று சொல்லிக்கொண்டிருந்தது.

திடீரென்று பாட்டை நிறுத்தினர்கள். பூட்ஸ் போட்டு நடக்கும் ஒலி கேட்டது. சிறை அதிகாரிகள் யாரோ அந்தப் பக்கமாக நடந்துபோய்க்கொண்டிருந்தார்கள்.

கண்ணைத் துடைத்துக்கொண்டே அவன் பேசினன். "இந்தக் காலத்தில் பணக்காரரைப்பற்றி ஒன்றுமே பேசக் கூடாது. பணிந்து போய் விடவேண்டும், சாமி" என்று எனக்கு அறிவுரை கூறுவதுபோல் சொன்னன்.

அவன் சொன்னது சரி என்று அடிக்கடி என் மனதிலே தோன்றியதும் உண்டு. ஆனலும் அப்போது அவனிடம் ஒத்துக்கொள்ள மனம் வரவில்லை. "அப்படிப் பணப்பூசை செய்ய என்னல் முடியாதப்பா. நான் ஆஸ்திகன், தெரியுமா?" என்று வீரமாக ஒரு சொல் சொன்னேன்.

அவன் பேசாமல் தலை குனிந்து இருந்தான். அவனுடைய கவலையை மாற்றுவதற்காக வேடிக்கையாகப் பேச்சை மாற்றினேன்.

"உனக்கு எது அப்பா தெய்வம்? பணமா? கடவுளா?" என்று கேட்டேன்.

“இரண்டுந்தான்” என்று உடனே சொல்லி முடித்தான்.

“அதுதான் முடியாது. நான் சொல்லவில்லை, அப்பா. ஒருவன் கடவுளையும் பணத்தையும் ஒருங்கே பூசை செய்ய முடியாது என்று பெரியோர்களே சொல்லி யிருக்கிறார்கள்” என்றேன். என் தத்துவப் பேச்சு அவன் நெஞ்சில் பதியவில்லை.

“என்னவோ, சாமி, பணக்காரருக்கு அடங்கிப்போவது தான் நல்லது” என்றான்.

அப்போதுதான் எனக்கு ஓர் எண்ணம் தோன்றியது. அவன் சிறைத்தண்டனை அடைந்ததில் இதுபோல் ஒரு காரணம் இருக்கவேண்டும் என்று தோன்றியது. அவனை உடனே கேட்டேன். அந்தப் பதிலும் எதிர்பார்த்தபடியே இருந்தது.

அவன் வேலை செய்துவந்த இடம் பெரிய கள்ள மார்க்கெட்டுச் சூழல்! தடபுடலாகச் செலவும் செய்வார்கள். கணக்கு வழக்கற்ற வருவாய்க்கும் வழி தெரிந்து தேடிக் குவிப்பார்கள். கள்ள மார்க்கெட் என்பது அவர்களுக்குக் கை கண்ட மூலிகைபோல. என்னுடன் கைதியா யிருந்தவன் படிப்பு இல்லாதவன்; ஆகையால தந்திரம் தெரியாதவன்; கள்ள மார்க்கெட்டுக்குப் பயன் படாதவன். அதனால் பெரும் பாலும் அவனை வீட்டு வேலைக்கே வைத்துக்கொண்டார்கள், உண்மையை மறைத்துப் பேசத் தெரியாத அவனை நம்பினால் அவர்களுக்கு இடர் தானே! அவனும் எப்படியோ நாளைக் கழித்து வந்தான். அவர்களுடைய செல்வமும் செல்வாக்கும் என்ன வேண்டுமானாலும் செய்யும்! அவர்களுடைய

பெண்ணுக்குத் திருமணம் செய்தபோது நாற்பதாயிர ரூபாய் செலவு செய்தார்கள். நகை மட்டும் இருபதாயிரம், அன்றைக்கு ஒரு நாள் ஒரு வேளையில் குறைந்தது ஐயாயிரம் பேர் கலியாணப் பந்தலில் சாப்பிட்டார்கள். நாங்களே பார்த்து வியந்தோம் எட்டு அவுன்ஸ் அரிசிக்கு ஏங்கிக் கிடக்கும் காலத்தில் ஐயாயிரம் பேருக்குச் சோறு போட முடிந்ததே! ஆனால், பாவம், அந்த ஏழை எப்படியோ பலி யாகி விட்டான். திருமணச் சாப்பாட்டு அரிசி திருட்டு வழியில் வந்தது அல்லவா? அந்த வழக்கிலே தாங்கள் அகப்படாமல் அவனைத் தள்ளிவிட்டார்களோ என்னவோ தெரியவில்லை. ஸ்டேஷன் அதிகாரியும் போலீஸாரும் திரு மணம் முடிந்த எட்டாம் நாள் வந்தார்களாம். அப்போது அந்த ஏழையின் பெயரைச் சொன்னார்களாம். அவனுக்குச் சம்மன் வந்ததாம். "டே! யார் என்ன கேட்டாலும், கோர்ட்டில் வாயை மூடிக்கொண்டு இரு. மூன்று மாதம், நான்கு மாதம் தண்டனை போடுவார்கள். பேசாமல் இருந்து விட்டு வா. நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். உன் குடும் பத்தையும் காப்பாற்றுகிறோம். நீ வந்த பிறகு உனக்கு இருக்கும் கடனைத் தீர்த்து அந்த நிலத்தை உனக்கே திருப் பிக் கொடுத்து விடுவோம்" என்று முதலாளி சொன்னாராம். "வாயைத் திறந்து தப்பும் தவறுமாக எங்களைப்பற்றி ஏதா வது உளறிக் கொட்டினால், உனக்குத்தான் நஷ்டம். ஆயுள் தண்டனை கிடைத்தாலும் கிடைத்துவிடும்" என்று மிரட் டினாராம்.

இந்த உண்மையை அவன் வாயிலிருந்து வாங்குவதற்கு எவ்வளவோ பாடுபட்டேன். "சாமி யாருக்கும சொல்ல வேண்டாம், மறந்து விடுங்கள்" என்று என்னைப் பார்த்துக்

கண் கலங்கிக் கேட்டான். பாவம், அவனுக்கு இன்னும் பணப் பூசையில் நம்பிக்கை இருந்தது.

"அப்பா, நான் யாருக்கும் சொல்லவேமாட்டேன். ஆனால், ஒன்று சொல்கிறேன். இப்படிப் பயந்து பணப் பூசை செய்தும் பயனில்லையே! ஒரு குற்றமும் செய்யாத உனக்குப் பதினைந்து மாதத் தண்டனை ஆயிருக்கிறதே!" என்றேன்.

"நான் என்ன செய்வேன், சாமி. தலை விதி யாரை விட்டது?" என்றான்.

"அப்பா, எப்படியும் சிறைக்கு வந்து விட்டாய். இங்கே யாவது எண்ணிப் பார். ஒன்றே ஒன்று சொல்கிறேன். பணமும் உனக்கு ஒரு தெய்வமாக இருக்கிறது. என்? உலகத்திற்கே தெய்வமாக இருக்கிறது. ஆனால், அந்தப் பணத் தெய்வத்தைச் சிலர் நம்புகின்றார்கள். சிலர் பூசை செய்கின்றார்கள். சிலர் கைக்குள் வைத்துக்கொண்டிருக் கின்றார்கள். அந்தப் பணத் தெய்வம் யாரைக் காப்பாற்று கின்றது, தெரியுமா? நம்புகின்றவர்களை அல்ல, பூசை செய்கின்றவர்களை அல்ல, கைக்குள் அடக்கி வைத்திருப்ப வர்களை மட்டுமே காப்பாற்றுகின்றது" என்றேன்.

"உண்மைதான், சாமி" என்றான் அந்தக் கைதி. தேசத்திற்காகச் சில முறை சிறை சென்று பல கைதிகளுடன் நான் பழகி யிருக்கின்றேன் அல்லவா? அதனால், "உண் மை தான், சாமி" என்று அவன் சொன்ன பதிலால், மனம் திருந்திவிட்டதாக நான் நம்பவில்லை.

அன்று இரவு நல்ல தூக்கத்திலிருந்து கொசுக்கடி பொறுக்க முடியாமல் விழித்துக்கொண்டேன். மூட்டைப் பூச்சிகள் ஒன்றுகூடி எனக்கு மறுபடியும் உறக்கம் வாராதபடி தடையுத்தரவுகள் பிறப்பித்துக்கொண்டிருந்தன. என் புதிய தோழன் குறட்டை விட்டுக்கொண்டிருந்தான். ஒரு முறை வாய் பிதற்றினான். "சாமி! எனக்கு நிலம்கூட வேண்டாம் சாமி! நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள் — என் பசங்கள் வயிற்றைப் பார்த்துக்கொள்ளுங்கள் — எட்டு அவுன்ஸ், எட்டு அவுன்ஸ் என்று சொல்கிறார்கள் — நீங்கள் சொன்னபடி கேட்பேன், சாமி — வாயே திறக்க மாட்டேன் —" என்ற சொற்களை அரை குறையாகப் பிதற்றிக்கொண்டே மறுபடியும் குறட்டை விட்டான்.

"பணத் தெய்வமே! உனக்கும் கண் இல்லையா?" என்று சொல்லிக்கொண்டே நான் கொட்டாவி விட்டேன். சிறை வாசலில் இருந்த கடிகாரம் பன்னிரண்டு அடித்தது.

தமிழன் குரல்

●

தமிழரசு இயக்கத்திற்கு கடல் கடந்த தமிழர் ஆதரவு

[தமிழகம் தனிநாடாகி அதில் சுதந்தர சோஷியலிசக் குடியரசு அமைய வேண்டும்; புதிய தமிழகத்திற்குக் குமரி முனை தெற்கெல்லையாகவும், திருப்பதி மலை வடக்கெல்லையாகவும், சென்னை தலைநகராகவும் அமையவேண்டும் என்ற கொள்கைகளுக்குக் கடல் கடந்து இலங்கை, மலேயா, தென்னாப்பிரிக்கா முதலிய பிறநாடுகளில் வாழும் தமிழரிடையே ஆதரவு பெருகி வருகிறது. தமிழரசுக் கழகத்திற்குத் துணைக் கழகங்களும் அமைக்கப்படுகின்றன. இதைக்கீழ் வரும் செய்திகளால் அறியலாம். —ஆசிரியர்]

கோலாலம்பூரிலிருந்து வெளிவரும் ' தமிழ் நேசன் ' என்ற தினசரி பத்திரிகையில் 4-8-47ல் திரு. வி. மாணிக்கம் என்பவர் எழுதியுள்ள கட்டுரை பின்வருமாறு :

தமிழரசா? திராவிடமா?

தமிழ் நாடு தனியரசாகவேண்டும்; தமிழ்க்கொடி கம்பீரமாய்ப் பறக்கவேண்டும். இதில் தமிழன் என்று கூறிக் கொள்ள ஆசைப்படும் எவருக்கும் ஆட்சேப மிருக்க முடி-

யாது. ஆனால், சென்னை மாகாணம் எப்படி அறிவு, ஆற்றல் திறமை, தியாகம் இவைகளில் முன்னணியில் நிற்கிறதோ அதேபோல் கட்சி, பிரதி கட்சிகளுக்கும் குறைவில்லாமல் இருக்கிறது.

தமிழ் நாட்டைப் பொருத்தவரையில் தமிழுக்கும், தமிழ் நாட்டுக்கும் தொண்டு செய்வதாக, கிளம்பியுள்ளகட்சிகள் அனந்தம். அவை பெரியார் ஈ. வெ. ரா. தலைமையிலுள்ள திராவிட இயக்கம் ஒன்று; ம. பொ. சிவஞான கிராமணியாரின் தமிழரசு இயக்கம் பிறிதொன்று. மேற்குறித்த கட்சிகளின் மூலாதாரக் கொள்கைகள் பின்வருமாறு புலப்படுகின்றன.

திராவிடர் இயக்கம்

'முதலில் 'திராவிடம்' வட நாட்டுப் பிடியிலிருந்து அறவே விலகவேண்டும். அடுத்து, தமிழ் நாடு, ஆந்திரம், கேரளம் கன்னடம் இவைகள் தனியரசாகவேண்டும். இத் தனியரசு நான்கும் திராவிடர் பெடரேஷனாகவேண்டும்' எனப் பிரச்சாரம் செய்கிறது.

தமிழரசு இயக்கம்

சிறந்த தேசியவாதியான சிவஞான கிராமணியாரால் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் தமிழ் பேசும் அனைவரும் ஒரே மக்கள்! ஒரே குலம்! ஒன்றே ஜாதி! தமிழ்ப் பேசும் அனைவரும் வாருங்கள், ஒன்றுபடுவோம்! சென்னையிலோ, திருவிதாங்கூர் தமிழகத்திலோ, திருப்பதியிலோ, ஒரு துண்டு நிலத்தையும் இழந்துவிடக்கூடாது! 'டில்லி சலோ!' என்று முழக்கமிட்ட தமிழர்களின் குரல் இனி 'திருப்ப

திக்குப் போ!' என்று முழங்கவேண்டும்!'எனக் கர்ஜனை செய்கிறார்.

இந்த இரண்டு இயக்கங்களில் எது காரியசித்தியடையும் என்பதை சிந்திக்கவேண்டியது அவசியமாகிறது.

திராவிட இயக்கம் ஒரே கல்லில் பல பட்சிகளை அடிக்க நினைக்கிறது. வடநாட்டுப் பிடி, பனியாக்கள் வாணிபம், ஆரிய அதிகாரம், முதலாளிகள் மிடுக்கு, தெய்வ நம்பிக்கை இவ்வளவையும் ஒழித்து ஐக்கிய திராவிடத்தை ஸ்தாபிக்க முயற்சிக்கிறது. ஆனால், மேற்குறித்தவைகளில் ஒவ்வொரு தமிழனும் ஏதாவது ஒன்றில் பற்றோ, அனுதாபமோ உள்ளவனாகத்தானிருப்பான். ஆகையால் மேற்குறித்த எல்லாவற்றையும் ஒரேயடியில் ஒழித்து ஐக்கிய திராவிடத்தை ஸ்தாபிக்க தமிழர்கள் அனைவரும் ஒரேமுகமாக முன் வருவார்களா என்றால், பொறுத்துப் பார்க்க வேண்டிய விஷயமாக இருக்கிறது. ஆனால் அன்பர் சிவஞானமோ, 'தமிழ் பேசும் யாவரும் ஒன்று! தமிழன் என்று ஒத்துக்கொள்ளும் அனைவருக்கும் தமிழ் நாடு சொந்தம்' என்று ஒரே குரலாக குமரிமுதல் வேங்கடம்வரை முரசொலிக்கிறார். முரசொலிக்கு முழு ஆதரவும் கிடைக்கிறது. மொழிவாரி மாகாணப் பிரிவினைக்கு சென்னை சட்டசபையில் ஆதரவும் தேடிக்கொண்டார்.

ஒரு லட்சியத்தை சீக்கிரம் அடையக் குறுக்கு வழி, குரல் ஒரே குரலாய் இருக்கவேண்டும். இதர பிரச்னைகளில் அதிக கவனம் செலுத்தாமல் முதலில் தேச விடுதலை, அதன் பின்தான் எல்லாம், என்று ஒரேமுகமாகக் கூறிக்கொண்டிருந்ததால்தான் காங்கிரஸ் வெற்றி கண்டது. அதேபோல்

லீரும், பாகிஸ்தான் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருந்ததால்தான் அதுவும் வெற்றியடைந்தது.

அதேபோல், தமிழரசை முதலில் ஸ்தாபிப்போம்; அதன்பின் நடக்கவேண்டிய இதர பிரச்னைகளை அவ்வப்போது கவனிப்போம் என்று சங்கநாதம் செய்யும் அன்பர் சிவஞானத்தின் கட்சிக்கு ஆதரவே இக் கட்டுரை. தமிழன், தமிழ் நாட்டவன் என்று கூறும் அனைவரும் ஒரேமுகமாக தமிழரசுக்கு ஆதரவு காட்டினால் தமிழ்க்கொடி இராஜ இராஜ சோழன் காலத்தைப்போல் உலகின் நானு பகுதிகளிலும் கம்பீரமாக ஏன் பறக்காது?

வாழ்க தமிழ் நாடு!

தமிழரசுக் கழகத்துக்கு ஆதரவளிப்போம்.

பினாங்கிலிருந்து வெளியாகும் 'முயற்சி' என்னும் பத்திரிகையில் தைப்பிங் திரு. அ. செ. லட்சுமணன் எழுதுவதாவது:—

"'இன்று ஒரு புதிய முயற்சி தோன்றியுள்ளது. இதைப் பற்றித்தமிழர் ஆழ்ந்து சிந்திப்பதுடன் செயல்புரியவும் முன் வர வேண்டும். இது தமிழகத்தின் எல்லையை, தமிழர்களின் மானத்தைக் காக்க வேண்டிய நேரம். ஆந்திரர்கள் சென்னை தங்களுக்குச் சொந்தமெனச் சாதிக்கிறார்கள். இதை நினைத்துச் சிரிப்பதா? அழுவதா?. 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி' என்பது போலல்லவா இருக்கிறது? வரலாற்றுப்படியும், வாழும் மக்களின் எண்ணிக்கைப்படியும் தமிழருக்கே உரியதான சென்னையைத் தமிழகத்திலிருந்து பிரிப்பதா? இதற்கு ஆதரவு கொடுப்

போர் எவராயினும் சரியே அவர்களையும் தமிழர் எதிர்த்தே தீருவர். இதுவரை அந்நிய ஆதிக்கத்தை இந்தியாவிலிருந்து வெளியேற்றுவதற்காகச் செய்த தியாகத்தைப் போன்று சென்னையைக் காக்கவும் செய்யவேண்டும். இத்தகைய அரும்பணி திரு. சிவஞானம் தலைமையில் தமிழகத்தில் துவங்கப்பட்டுள்ளது. தமிழரசு இயக்கம் சோர்வுற்றுக் கிடந்த தமிழ் நாட்டைத் தட்டி எழுப்பித் தன்னுணர்வு கொள்ள வைத்திருக்கிறது. இம்மலேயாவில் வதியும் தமிழர்களாகிய நாம் தமிழ் நாட்டிற்காக நமது கடமையைச் செய்யவேண்டும். மலேயாவில் "தேசியத் தமிழர் சங்கம்" நிறுவி இன உணர்ச்சியைப் பெருக்கி தமிழகத்தில் நடக்கும் எல்லைப் போராட்டத்திற்கு ஸ்தாபன ரீதியாக உதவி புரியலாம். தமிழர் முன் வருவாராக!

புதிய அரசியலும் மாகாணங்களும்

ம. பொ. சி.

II

அரசியல் நிர்ணய மன்றத்தார் தயாரித்துள்ள சுதந்திர இந்தியாவுக்குரிய புதிய அரசியலில் மாகாணங்கள் அடிமையாக்கப் பட்டுள்ள விதத்தைக் கடந்த கட்டுரையில் விவரித்தோம். இனி, புதிய அரசியலில் தமிழகத்தின் நிலை எதுவாயிருக்கு மென்பதை ஆராய்வோம்.

இந்தியாவில் அரசாங்கத்திற்குரிய எல்லா சின்னங்களும் சிறப்பு களும் உடையது மத்திய யூனியன் அரசாங்கம் ஒன்றுதான். மாகாணங் களில் "அரசாங்கங்கள்" என்பதெல்லாம் வெறும் நிர்வாக சௌகரி யத்தை ஒட்டிப் பிரிக்கப்பட்ட பிரதேசங்கள் போன்றவையேயாகும்.

எனவே, தமிழ் நாடு தனிமாகாணமாக்கப் பட்டாலும் கூட, அ. நி. மன்றத்தார் தயாரித்துள்ள புதிய அரசியலே அந்த பிரிக்கப் பட்ட தமிழகத்தில் அமுல் நடக்குமென்றால், அது மத்திய யூனியன் அரசுக்குக் கட்டுப்பட்ட அடிமை அரசாங்கமாகத்தான் இருக்க முடியும்.

ஏனெனில், கொடி, முத்திரை போன்ற அரசாங்க சின்னங் களும் படை, குடி போன்ற பாதுகாப்பு சக்திகளும், கைத்தொழில், வாணிபம், சுங்கம், நிதி போன்ற செல்வ வளங்களும், புதிய அரசிய லின்படி தமிழகத்துக்கு இருக்காது. இத்தகைய கேவல நிலையில் குமரிமுதல் வேங்கடம்வரை தனி மாகாணம் கண்டு விடுவதினாலேயே தமிழருக்குச் சுதந்திரம் கிடைத்து விட்டதாக எண்ணுவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகவே முடியும்.

"அந்நிய நாட்டு உறவு, போக்கு வரவு, பாதுகாப்பு, ஆகிய மூன்று பொறுப்புக்களும் இந்திய அரசாங்கத்தினுடையதாகும்."

என்று பிரிட்டிஷ் திட்டம் கூறியது. இந்தியாவின் ஒற்றுமையை விரும்பும் எந்த மாகாணமும் இந்தப் பொறுப்புக்களை விட்டுக் கொடுப்பதைத் தனது கடமையாகவே கொள்ளும். தமிழகமும் அப்படித்தான். ஆனால் "அன்னிய நாட்டு உறவு" என்பதன் பொருள் எதுவாயிருக்க முடியும்? பிறநாடுகளுக்கு இந்தியத் தூதுவர்களை நியமிப்பது, சர்வ தேச மாநாடுகளுக்கு பிரதி நிதிகளை அனுப்புவது, வெளி நாடுகளுடன் அரசியல் உடன்படிக்கை செய்வது போன்ற அரசியல் உறவுகளேயாகும். ஆனால், 'உறவு' என்பதில் வாணிபமும் பொருந்தியதே என்று கூறி வெளிநாட்டு வாணிபத்தை மாகாணங்களிடமிருந்து பறித்து மத்திய அரசாங்கத்துக்கு வழங்கி விட்டனர் அரசியல் நிர்யண மன்றத்தார்.

ஆதிகாலந் தொட்டு கடல்கடந்த வாணிபம் தமிழருக்கே உரித்தாயிருந்ததென்பதை தமிழ் இலக்கியங்களில் மட்டுமன்றி சீனம், சிங்களம், கிரீக், ரோமாபுரி ஆகியவற்றின் வரலாறுகளில் பாரக்கக் காணலாம். அத்தகைய சிறப்பெலாம் பெற்ற செந்தமிழ் நாட்டார் இனி சுதந்திரமாகப் பிறநாடுகளுடன் வாணிபம் செய்ய புதிய அரசியலில் வழி கிடையாது. இந்தக் கொடுமையைப் பற்றி அரசியல் நிர்யண மன்றத்தின் தமிழகப் பிரதிநிதிகள் எதிர்த்து ஒரு வார்த்தை பேசினார்களில்லை. ஆம்; தமிழருக்கென்றே தனி வரலாறு உண்டு என்பதையே அறியாத அப்பாவிகளன்றோ அவர்கள்.

வெளி நாட்டு வாணிபத்தைத் தமிழர் இழந்து விடுவதால் தமிழகத்துக்கு ஏற்படும் சீர்கேடுகள் செப்புந்தரமன்று. அண்மையில்நடந்த அநீதி ஒன்றே அதை அறிந்து கொள்ளப் போதுமானது. பஞ்சம் தென்னாட்டின் தலைவாயில் கதவைத் தட்டுகின்ற காரணத்தால் தாமே நேரடியாக பிற நாடுகளிலிருந்து உணவுப்பொருளை விலைக்கு வாங்கும் உரிமை தரவேண்டும் என்று சென்னை அரசியலார் மத்திய அரசுக்கு மனுப் போட்டனர். ஆனால் உரிமை மறுக்கப்பட்டது. "மாகாணத்திற்குத் தேவைப்படும் உணவுப் பொருளைக் கொடுக்க மத்திய

அரசுக்கு மனமில்லை. நாங்களாக பிறநாடுகளிலிருந்து பொருளை வாங்கவும் உரிமை தருவதில்லை. நெல்லின் விலையை உயர்த்தவும் கூட எங்களுக்கு உரிமை இல்லை" என்று சென்னை உணவு அமைச்சர் அசெம்பிளியில் உணர்ச்சி ததும்ப பேசியதை யாரே அறியார்? புதிய அரசியலிலும் தமிழகத்தின் நிலை இதுதான்.

மாகாண அரசாங்கங்களுக்குப் பிற மாகாணப் பொருள்கள் மீது சுங்கம் விதிக்க உரிமை கிடையாது. மேலும், இந்தியாவின் எந்தப் பகுதியிலும் இந்தியராயுள்ள எவரும் குடியேறி வாணிபம் செய்யவும் தொழில் நடத்தவும் புதிய அரசியல் இடந்தருகின்றது. இவற்றின் விளைவு என்ன ஆகும்? வளர்ந்து விட்ட வடஇந்திய முதலாளித்துவம், தமிழ்நாட்டில் ஏற்கனவே நடத்திவரும் சுரண்டல் வேலையை சுதந்திரம் என்ற புனிதமானபெயரால் தொடர்ந்து நடத்த இடந்தருவதாகும்.

இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்தலில் ஒவ்வொரு மாகாணத்தவரும் மாறி மாறி குடியரசுத் தலைவராக வர புதிய அரசியலில் விதி ஒன்றும் இல்லை. 'தென்னிந்தியாவிலிருந்தும் வடஇந்தியாவிலிருந்தும் மாறி மாறி தேர்ந்தெடுக்கும் முறையைக்கடைப் பிடிக்கலாம்' என்று ஒரு ஆந்திரப் பிரதிநிதி ஆலோசனை கூறினர். அரசியல் நிர்ணய மன்றம் அதை ஏற்க மறுத்துவிட்டது. 'தகுதியைக் கொண்டே தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்' என்று பதில் கூறப்பட்டது. ஆனல், கடந்த கால அனுபவத்தைக்கொண்டு பார்க்கின்ற பொழுது 'தகுதி' யென்பது தமிழகத்தின் பழங்குடி மக்களுக்குப் பொருந்தாத ஒன்று என்பதை அகில இந்திய தலைமையினர் தமதுசெயலால் நமக்கு அறிவித்துள்ளனர். 'முடிசூடா மன்னர்' பதவி என்று புகழப்படும் அகிலஇந்திய காங்கிரஸ் தலைவர் பதவியை அலங்கரித்த ஐம்பது பேரில் இருவர்தான் தமிழ்நாட்டார். துன்பம் நிறைந்த போராட்டப் பாதையிலேயே தமிழர் நடத்தப்பட்ட விதம் இது என்றல் இன்பம் துய்க்கும் எதிர்கால அரசியலில் தமிழர் நிலை எதுவாக இருக்குமென்பதை சொல்ல வேண்டுமா?

மாகாண கவர்னர்களை அந்தந்த மாகாணத்திலுள்ள வயது வந்த வாக்காளர்களே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று புதிய அரசியல் கூறுகிறது. இது வரவேற்கத்தக்கதே. ஆனால் கவர்னர் தவறிழைத்தால் அவரைப் பதவியிலிருந்து விலக்கும் அதிகாரம் மட்டும் மாகாணத்திற்குக் கிடையாது. மாகாண அசெம்பிளி கவர்னர் மீது குற்றப்பத்திரிகை தயாரித்து மத்திய மேல்சபை (பிரபுக்கள் சபை)க்கு அனுப்பலாமே ஒழிய, குற்றத்தின்மீது தீர்ப்பளிக்க உரிமையில்லை. இந்தநிலையில் தமிழகத்திற்கு கவர்னர் தேர்ந்தெடுக்கத் படுவாரானால் 'பதவி அளிப்பது தமிழ்நாடு; அவரைப் பயன்படுத்திக்கொள்வது வடநாட்டு மூலதனம்' என்றநிலை ஏற்படாதென்று யாரே உறுதி கூறமுடியும்?

●

PIMPLE Cure

அசிங்கமான முகப்பருக்கள் முகத்தின் சௌந்தரியத்தை பாழ்படுத்தி விடும். சுவாதியின் முகப்பரு நிவாரணியால் சருமத்திலுள்ள பரு, கருப்பு புள்ளிகள், முதலிய படைகளை அகற்றி இயற்கை அழகை மீண்டும் பெறுங்கள்

SWATHI PRODUCTS, LTD.

MADRAS.

தென் இந்தியாவிற்கு பிரதம ஏஜண்டுகள் :—

ஏர். ஸ்டீபோர் & ஜெனரல் ஏஜென்ஸீஸ் லிமிடெட், சென்னை.

பைத்தியக்காரன்?

சி. வே.

சீரழிந்த இன்றைய சமுதாயத்தைச் சீர்திருத்த விரும்பும் எவருக்கும் எளிதில் கிடைக்கும் பட்டம் '**பைத்தியக்காரன்**' என்பது. அதிலும் அடுப்பங்கரைவரை ஆதிக்கம் கொண்டு விட்ட மூடநம்பிக்கையை முறியடிக்க நினைப்பவன் பைத்தியக்காரனாக்கப்படுவது எதிர் பார்க்கவேண்டியதே.

என். எஸ். கே. பிலிம்ஸார் 'பைத்தியக்காரன்?' என்னும் படத்தில் இந்த உண்மையை உணர்த்துகின்றனர். 'விதவை மணம் வேண்டும்' என்ற எண்ணத்தைப் பரப்பும் இந்தக் கதையில் பெண்ணினத்திற்குற்ற இன்னல்களெல்லாம் பொருத்தப்பட்டுள்ளன.

திரு. சகஸ்ரநாமம் நளினியின் சகோதரன் சேகராகத் தோன்றி திறமையாக நடிக்கிறார். அதுவும் 'சபாபதி இறந்தார்' என்ற தந்தியைப் படிக்கும் கட்டத்திற்கு பிறகு படத்தின் இறுதிவரை நடிப்புக் கலையின் சிகரத்திலேறி காட்சியளிக்கிறார்.

நளினியாக நடிக்கும் பெண் விதவைக்குரிய, அதிலும் கட்டிய தாலியை மறுமணமே கழற்றி எறிந்த கன்னிப்பெண்ணிற்குரிய, கவலைகளையெல்லாம் தன்முகத்தே தேக்கிக் காட்டுவது காண்போரின் கண்ணீரைக் காணிக்கையாகக் கேட்டது போல் இருக்கிறது. அதிலும் கணவனை இழந்தபின் தன் கண்ணீரைக் காவலாக்கிக் காத்துவந்து கற்பை காமுகன் சோமு அழித்த பின்னர், அண்ணனுக்கு கடிதம் எழுதி மண்ணுலகை விட்டுப் பிரியும் கட்டம் பார்ப்போரைப் பரிதவிக்கச் செய்கிறது.

ச் ஃ

திருமதி டி. ஏ. மதுரம் பிரமுகரின் இரண்டாவது மனைவி காந்தாவாகவும், வேலைக்காரன் காதலி 'வள்ளி'யாக வும் இரண்டு வேடத்திலும் தோன்றுகிறார். நடிப்புக்குக் கேட்கவா வேண்டும்? இந்தப் படத்தில் திருமதி மதுரம் நன்றாகப் பாடுகிறார்.

கலியாணத் தரகர் குருசாமி பிள்ளை இயற்கையாக நடிக்கிறார். முன்பு 'பைத்தியக்காரன்?' நாடகத்தில் 'சனி' யாக நடித்து என். எஸ். கிருஷ்ணன் இல்லாத குறையை ஓரளவு பூர்த்திசெய்து வந்த திரு ராதா கிருஷ்ணன் இந்தப் படத்தில் வேலைக்கார 'சனி'யின் (என். எஸ். கிருஷ்ணன்) தம்பியாக நடிக்கிறார். நகைச் சுவைக்கலையில் வளர்ச்சி பெற்று வரும் இவருக்குப் படத்தில் இன்னும் கொஞ்சம் அதிக மாக இடமளித்திருக்கலாம்.

வேலைக்கார "சனி"யாக நகைச்சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணன் நடிப்பது படத்துக்கே ஒரு தனிச் சிறப்பை யளிக் கிறது. திரு. கிருஷ்ணன் தமது கடந்த கால சிறைவாசத்துக் கான காரணங்களை நாட்டு மக்களுக்கு நன்கு விளக்க இந்தப் படத்தைப் பயன் படுத்திக் கொண்டிருக்கிறார். "ஒரு சிலர் கொண்ட பொறுமைக் குணங்களெல்லாம் உருவமாச்சுதுங்க— நமக்குள் ஒற்றுமை யில்லீங்க" என்றவரிகளில் முன்னேறும் தமிழனைப் பின்னுக்கு இழுக்கும் முதலைக் கூட்டங்கள் கலைத் துறையிலும் இருக்கின்றன என்பதையும் நமது கவனத் துக்குக் கொண்டு வருகிறார்.

பொதுவாக 'பைத்தியக்காரன்?' எதிர்பார்த்ததுபோல் எல்லாவகையிலும் சிறப்பாக அமைந்துள்ளது.

படத்தின் இறுதியில் கவியரசர் பாரதியாரின் உருவச் சிலை கண்ணுக்கு காட்சியளிப்பதும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் "பாட்டுக்கொரு புலவன் பாரதியடா" என்ற பாடலைக் கொண்டு கருத்துக்கு விருந்தளிப்பதும் மிக மிகப் பாராட்டத்தக்கது.

●

தமிழரசு (கிளை) கழகங்கள்

தமிழரசுக் கழகச் செயலாளர் திரு. கொ. மொ. ஜனார்த்தனம் பின்வருமாறு எழுதுகிறார்;—

தமிழக மெங்கும் தமிழரசுக்கழகத்தின் கிளைக் கழகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. பல கிளைக் கழகங்களின் செயற்குழு விவரம் 'முரசில்' வெளிவந்துள்ளது: மேலும் பல கழகங்களின் செயற்குழு விவரம் வருமாறு:

குளித்தலை: தலைவர் மணி முத்துசாமி; துணைத் தலைவர்: ஆர். கோவிந்தன்; செயலாளர்: வி. சீனிவாசன்; துணைச் செயலாளர்; கி. பிச்சமூர்த்தி. உறுப்பினர்: இரா. சீனிவாசன்; ல. மருதமுத்து, சு. முருகேசன், ஏ. இராமசாமி, கே. செல்லப்பா, கே. பஞ்சநாதன், மு. காத்த பெருமாள், டி. சண்முகம், என். கனகசபை

வேகுப்பட்டி(புதுக்கோட்டை சமஸ்தானம்): தலைவர்: ஆ. பழ. குமரப்பன். செயலாளர்: நாக. சண்முகம், துணைச் செயலாளர்: கா. சிவலிங்கம்; பொருளாளர்: ஆ. இராமநாதன். உறுப்பினர்: கும. கு. இராம சுந்தரம், ஆவ. இராமநாதன், பெரி, நடராஜன், இராம. மு. நடராசன் இராம. மு. இராமநாதன், கரு. அண. பழனியப்பன், பழ. இராமநாதன், லெ. மாணிக்கம், இராம. சோம்சுந்தரம், பழ. லெ. பழனியப்பன், அண, இராமநாதன், இராம. சுந்தரம், லெ. இராம. சிங்காரம்.

அழகை: தலைவர்: திரு. இ. பெருமான்; செயலாளர்: திரு, அ. சு. வேலாயுதம், துணைச் செயலாளர்கள்: சு. திரவியம், இரா. ஆண்டி. மற்றும் பத்து செயற்குழு உறுப்பினர்கள்.

திருவிதாங்கூர் தமிழகம்:— தலைவர். இரா. சுப்பிரமணியம், பொதுச் செயலாளர்: சௌந்தர பாண்டியன், துணைச் செயலாளர்: கிருஷ்ணமூர்த்தி, பொருளாளர்: நாஞ்சில். மணி, மற்றும் பத்து உறுப்பினர்கள்.

வள்ளிமலை (சித்தூர் மாவட்டம்):— தலைவர்; டி. வேலாயுத முதலியார்; துணைத் தலைவர்: கே. எம். சண்முகம்; செயலாளர்: எம். எஸ். நடராசன்: துணைச் செயலாளர்: கே. ஒய். நாராயண சாமி; பொருளாளர்: பி. கன்னியப்ப ரெட்டியார்: உறுப்பினர்:— முனுசாமி முதலியார்; கந்தசாமி ரெட்டியார்; பி. அப்பாத்துரைக் குருக்கள்; ஆ. சபாபதி ரெட்டியார்; டி. முருகேச முதலியார்; பா. பு. பெரபாத்த முதலியார்; சி. பா. கன்னியப்ப பிள்ளை; ராஜு ரெட்டியார்; பொன்னப்ப ரெட்டியார்; கிருஷ்ணசாமி முதலியார்; முனிரத்தின முதலியார்; ஆர்தர் மேயீ.

ஊத்துப்பட்டி: (திருநெல்வேலி மாவட்டம்) தலைவர்: இராமசாமி; துணைத் தலைவர்: சுப்பையா; செயலாளர் M. கணபதி; துணைச் செயலாளர்: S. நடராசன்; பொருளாளர்; லோகநாதன் மற்றும் பத்து நிர்வாக உறுப்பினர்.

●

பிழை திருத்தம்

சென்ற 15-9-47 'முரசு' இதழிலே 'வடக்கெல்லையில் ம.பொ. சி.' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் புத்தூரிலே தமிழரசுக் கழகத்தினரை வரவேற்று உபசரித்தவர் திரு துரைசாமி முதலியார் என்றிருப்பது தவறு. திரு. மின்னல். வ. முருகப்ப முதலியார் என்று திருத்தி வாசிக்கவும். அதேபோல் நகரிபுதுப்பேட்டையில் வரவேற்று உபசரித்தவர் திரு. காளத்தி முதலியாராவர்.

15-9-47 இதழில் தமிழரசுக் கழக கிளையமைப்புகளில் செயற்குழு விபரம் வெளிவந்துள்ளதில் வடசென்னை தமிழரசுக் கழக செயற்குழுவின் பட்டியல் சரிவர இல்லை. எனவே அதை நன்கு திருத்தி மீண்டும் வெளியிட்டுள்ளோம். தலைவர்: பி. ஆர். சீராமுலு நாயுடு; செயலாளர்: த. ஆறுமுகம்; துணைச் செயலாளர்:

வேணுகோபால்; பொருளாளர்; ப. மாணிக்கவேலு. உறுப்பினர்; வி. என். குமாரசாமி; பெ. வரதராஜுலு; எம். ஆர். வெங்கட்டராமன்; நா. செல்வராசு; நா. சண்முகனார்; V. குப்புராஜு; ஜான் மாசிலாமணி, ஊ. சண்முகம், நடராசன், தாண்டவராயன், திருவொற்றியூர் தேவராசன், திருவொற்றியூர் ஏழுமலை, இராமலிங்கம், பி. மாணிக்கம், சம்பந்தம்.

●

ஆசிரியருக்குக்கடிதம்

ஆசிரியர் அவர்களுக்கு,

ஐயா, கடந்த 28-9-47 ஞாயிறுமாலை இராயபுரம் ராபின்சன் பார்க்கில் பெரியார் ஈ. வே ராவின் பிறந்த தினக்கூட்டத்தில் பேசிய டாக்டர் A. கிருஷ்ணசாமி திராவிடக்கழகத்தின் கொள்கைகளை விளக்கும் பொழுது, "சென்னையை ஆந்திர நாட்டுக்கும் தமிழ் நாட்டுக்கும் பொதுவாக ஆக்குதல் வேண்டும்" என்றார். அதுமாத்திரமல்லாமல், "சென்னையைத் தமிழகத்துக்குத் தலைநகராக வைக்க வேண்டுமென்று தமிழர்கள் தோழர் சிவஞானம் தலைமையின் கீழ் கிளர்ச்சி செய்வது நல்லதல்ல" என்றார். இந்தப் பிரச்சாரம் விஷமம் உடையது; வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

வாழ்க தமிழகம்!

நா. சண்முகனார்

இராயபுரம், 5-10-47.

மதிப்புரை

வரப் பெற்றோம் :—

'தோழன்': திங்கள் வெளியீடு; ஆசிரியர்: எஸ். எம். எம். முஹியித்தீன்; தனிப்பிரதி அணா நான்கு; ஆண்டுக் கட்டணம் ரூ. 3-0-0. 'தோழன்' பணிமனை. 25, டாம் வீதி, கொழும்பு.

தேச சேவை: திங்கள் வெளியீடு; ஆசிரியர்கள் பிட்சு சுவாமிகள், என். ராஜகோபாலன். தனிப்பிரதி ஆறணா. ஆண்டுக் கட்டணம், நான்கு ரூபாய். 'தேச சேவை' செயலகம், பிரோசர் ஸ்கொயர், கோயம்புத்தூர்.

சங்கொலி: திங்கள் வெளியீடு; ஆசிரியர். திரு. டி. எஸ். குழந்தை வேலன்; தனிப்பிரதி நாலணா. ஆண்டுக் கட்டணம் 3-0-0. திருக்கழுக் குன்றம்.

செந்தமிழ்ச் செல்வி: திங்கள் வெளியீடு; ஆசிரியர்: திரு வி. சுப்பையா; ஆண்டுக் கட்டணம் ரூபாய் நான்கு. தனிப்பிரதி தருவதில்லை. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்., 6. பவழக்காரத் தெரு, சென்னை

'சிறுகதை:' மாதமிருமுறை; கௌரவ ஆசிரியர்: எஸ். சுப்பிரமணியம் எம். ஏ. விலை இரண்டணா; வேப்பேரி, சென்னை.

'ஸாரதி': மாத மிருமுறை; ஆசிரியர்: எஸ். ஆர். திருவேங்கடம்; விலை நாலணா; யாதவத் தெரு பாலக்கரை, திருச்சிராப்பள்ளி.

வெளியிட்டோர்: ம. பொ. சிவஞானம், 1.29. இருசப்ப கிராமணி தெரு. திருவல்லிக்கேணி சென்னை. அச்சிட்டோர் திரு. கே. தி. நாகலிங்க முதலியார் செங்குந்த மித்திரன் அச்சகம் சென்னை.

தமிழ் முரசு

(மாதம் இருமுறை)

உள்நாடு

ஆண்டுச் சந்தா	ரூ.	6—0—0
6 மாதச் சந்தா	ரூ.	3—0—0
தனி இதழ்	ரூ.	0—4—0

வெளிநாடு

ஆண்டுச் சந்தா	ரூ.	7—0—0
6 மாதச் சந்தா	ரூ.	3—8—0
தனி இதழ்	ரூ.	0—5—0

விளம்பர விகிதம்

(ஒரு இதழில் வெளியிட)

அட்டை (வெளிப்புறம்)	ரூ.	100.
அட்டை (உட்புறம்)	ரூ.	75.
புத்தகத்துள் ஒரு பக்கம்	ரூ	50.
புத்தகத்துள் அரைப்பக்கம்	ரூ	25.

தமிழ் முரசுப் பதிப்பகம்

திருவல்லிக்கேணி :: சென்னை

Wrapper Printed at the Sengunthа Mithran Press, Madras 1